# பாராளுமன்ற செய்திகள்

செய்தி மடல்

02 ஆம் தொகுதி

ஒகஸ்ட் 2020




01 ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரை ஜனாதிபதி வைபவரீதியாக ஆரம்பித்துவைத்தார்

02 மஹிந்தய யாப்பா அபேவர்தன அவர்கள் புதிய சபாநாயகராகத் தெரிவு

03 புதிய பிரதி சபாநாயகர் பதவிக்கு ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய தெரிவு

குழுக்களின் பிரதித் தவிசாளராக அங்கஜன் இராமநாதன் தெரிவு

04 சபை முதல்வர் பதவிக்கு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன

ஆளும் கட்சியின் முதற்கோலாசானாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பர்னாந்து நியமனம்

டிலான் பெரேரா, ஜயந்த கெடகொட ஆளும் கட்சியின் பிரதி முதற்கோலாசான்களாக நியமனம்

05 புதியப் பாராளுமன்றத்திற்கு பன்னிரண்டு பெண் பிரதிநிதிகள்

09 படைக்கல சேவிதர் பதவி அதன் வரலாறு மற்றும் பணிகள்

12 மக்கள் வாக்குகளால் இளமையான ஒன்பதாவது பாராளுமன்றம்



தொடர்பாடல் திணைக்களம்

இலங்கை பாராளுமன்றம்

# ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரை ஜனாதிபதி வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்



அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை முன்வைத்தார்.

அரசியலமைப்பின் 33 (2) உறுப்புரையின் கீழ் இதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு காணப்படுகிறது. அத்துடன் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரையும் ஜனாதிபதி அவர்கள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

பிற்பகல் 2.15 மணிக்கு விசேட விருந்தினர்களின் வருகையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதலில் பாராளுமன்ற உறுப்பினர்களின் வருகையும், அதனைத் தொடர்ந்து கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினதும், அதன் பின்னர் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வருகையும் அவற்றைத் தொடர்ந்து அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் வருகையும் இடம்பெற்றன.

ஜனாதிபதி மற்றும் முதற்பெண்மணியை கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க ஆகியோர் பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலில் வரவேற்றனர்.

படைக்கலசேவிதர், பிரதிப் படைக்கலசேவிதர், உதவி படைக்கலசேவிதர், சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் உள்ளிட்ட குழுவினரால் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் சபைக்குள் அழைத்துச் செல்லப்பட்டார். இதன்போது பாராளுமன்றத்தின் பிரதான வாயிலின் அருகில் கொழும்பு தேவிபாலிகா வித்தியாலய மாணவியரால் ஜயமங்கள கீதம் இசைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் வரவேற்பு நிகழ்வுகள் சாதாரணமான முறையில் முன்னெடுக்கப்பட்டதுடன், கலாசார ரீதியான வரவேற்பு நடன நிகழ்வுகள் மாத்திரம் இடம்பெற்றன.

ஆசிரியர் தலையங்கம்

# பாராளுமன்ற கௌரவத்தைப் பாதுகாத்தல்

ஆசியாவில் பழைமைவாய்ந்த பாராளுமன்ற சம்பிரதாயம் கடைப்பிடிக்கப்படும் நாடுகளில் இலங்கை இந்தியாவைவிட முன்னணியில் உள்ளது. அத்துடன் உலகில் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தும் நாடுகளில் இலங்கைக்கு முன்னணியான இடமே கிடைத்துள்ளது. இருந்தபோதும் கடந்த காலங்களில் பாராளுமன்றத்தின் கௌரவம் தொடர்பில் பாரிய கருத்தாடல்கள் காணப்பட்டதுடன், மக்களின் விமர்சனங்கள் அதிகரித்திருந்தன. இந்த நிலையில் புதிய பாராளுமன்றம் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் கௌரவம் மற்றும் நம்பிக்கையை பாதுகாக்கும் வகையில் செயற்படும் பொறுப்பு மற்றும் சவால் காணப்படுகிறது. இருந்தபோதும் உறுப்பினர்களுக்கு இந்த சவால்களை வெற்றிகொள்வது கடினமல்ல. இம்முறை பாராளுமன்றத்துக்கு 81 புதிய உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் புதிய உத்வேகத்துடன் பாராளுமன்றத்துக்குள் செயற்படுவதுடன், அவர்களால் சமூகத்துக்கு நல்ல விடயங்கள் நடக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. பாராளுமன்றத்தில் உள்ள 225 மக்கள் பிரதிநிதிகளும் நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் ஒன்றிணைந்தும் பொறுப்புடனும் நடந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கையும் காணப்படுகிறது. புதிய பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சகல மக்கள் பிரதிநிதிகளுக்கும் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள் புதிய சபாநாயகராகத் தெரிவு



பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க முன்னிலையில் பதவிச்சத்தியம் செய்துகொண்டார்.
1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி மாத்தறை பிரதேசத்தில் பிறந்த மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள் 30 வருடங்களுக்கு மேலாக அனுபவம் மிக்க அரசியல்வாதியாகத் திகழ்ந்து வருகிறார். இவர் தனது ஆரம்பக் கல்வியை தெலிஜ்ஜவில மத்திய மகாவித்தியாலயம் மற்றும் மாத்தறை ராகுல வித்தியாலயம் ஆகியவற்றில் பெற்றுக்கொண்டதுடன், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பப் பட்டம் பெற்றார். இந்தியாவின் சண்டிகார் முகாமைத்துவ நிறுவனத்தில் முகாமைத்துவம் தொடர்பில் விசேட கல்வியைப் பெற்றார்.

1983 ஆம் ஆண்டு ஹக்மன தேர்தல் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் வெற்றிபெற்று ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி முதன்முறையாகப் பாராளுமன்றத்துக்குச் சென்ற அவர், கடந்த 23 ஆண்டுகளாக பாராளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்துவருகிறார். 2020 பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தி மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு 80,895 முன்னுரிமை வாக்குகளுடன் இவர் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

1993/94 ஆண்டில் தென்மாகாண சபையின் முதலமைச்சராக இருந்ததுடன், 1994/2001 ஆண்டு காலப் பகுதியில் மீண்டும் அப்பதவியை வகித்திருந்தார். இவர் சுகாதாரம், கலாச்சார விவகாரங்கள் மற்றும் தேசிய பாரம்பரியம், நீர்ப்பாசனம் மற்றும் ஊரக வளர்ச்சி, தொழில் மற்றும் வர்த்தகம், பாராளுமன்ற விவகாரம் மற்றும் விவாசயம் போன்ற பல்வேறு துறைகளில் அவர் அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார்.



1987 ஆம் ஆண்டில் கோப் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியிருந்தார். கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள் கடந்த 2002ஆம் ஆண்டு சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்ற அமைதிக்கான ஆசிய பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்ததுடன், பங்களாதேஷின் டாக்கா நகரில் நடைபெற்ற 50 வது C.P.A மாநாட்டிலும், 2005ஆம் ஆண்டு பீஜிங் நகரில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற மாநாட்டிலும் கலந்துகொண்டிருந்தார்.

# புதிய பிரதி சபாநாயகராக ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய தெரிவு



பாராளுமன்றத்தின் புதிய பிரதி சபாநாயகராக ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் பெயரை சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர முன்மொழிந்ததுடன், கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா வழிமொழிந்தார்.

ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய அவர்கள் கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவில் கேகாலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், 103,300 விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

வெந்தலா கனிஷ்ட வித்தியாலயம் மற்றும் வெந்தலா ஆரம்ப வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை தொடர்ந்த ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய அவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் இலங்கையில் 2 ஆம் இடத்தை பெற்று கொழும்பு றோயல் கல்லூரிக்கு பிரவேசித்தார். அங்கு உள்நுழைவு பரீட்சைக்கு முகங்கொடுத்த அவர் மூவாயிரம் பேரில் இரண்டாம் இடத்தைப்பெற்றார். றோயல் கல்லூரியில் எல்லே மற்றும் கரப்பந்தாட்ட அணியை ஆரம்பிப்பதற்கு தலைமை வகித்தவர் அவரே.

உயர் தரத்தில் வணிக துறையில் கல்வி கற்ற அவர் கொழும்பு மாவட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்று ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு தெரிவானார். அங்கு கரப்பந்தாட்ட அணியின் தலைவராக சிறந்த வீரராக திகழ்ந்தார். பொது நிர்வாகம் தொடர்பான பட்டப்படிப்பை முடித்த அவர் விவசாய துறையை ஒட்டியதாக தனது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ருவன்வெல்ல தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைப்பாளராக 1998 ஜூலை 30 ஆம் திகதி நியமனத்தை பெற்றுக்கொண்ட அவர் 1999 இல் இடம்பெற்ற மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு, 21635 விருப்பு வாக்குகளை பெற்று மாகாண சபைக்கு தெரிவானார். 2000 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் கேகாலை மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்ட அவர் 49585 விருப்பு வாக்குகளை பெற்று முதல் முறையாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பை பெற்றுக்கொண்டார்.

2004 பொதுத்தேர்தலில் 80236 விருப்பு வாக்குகளை பெற்று பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அவருக்கு, நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சு கிடைத்தது. 2005 ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியின் கீழ் நிதி பிரதியமைச்சராக பதவி வகித்தார். 2007 இல் நிதி மற்றும் அரச வருமான அமைச்சராகவும் பதவி வகித்தார். 2010 பொதுத்தேர்தலில் கேகாலை மாவட்ட தேர்தல் வரலாற்றில் அதிக விருப்பு வாக்குகளான 146623 வாக்குகளை பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவானார்.
2015 ஆம் ஆண்டு தேர்தலை அடுத்து உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சு, சுற்றுச்சூழல் இராஜாங்க அமைச்சு மற்றும் மின் வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சராகவும், அதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் வெற்றியை அடுத்து உருவாக்கப்பட்ட அரசில் கல்வி இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்தார். இவர் தகவல் தொழில்நுட்ப அமைச்சராக இருக்கும்போதே 2018ஆம் ஆண்டு உலகில் சிறந்த கிராமிய தகவல் தொழில்நுட்ப விருதான பில் அன்ட் கேட்ஸ் விருது கிடைத்தது.

# குழுக்களின் பிரதித் தவிசாளராக அங்கஜன் இராமநாதன் தெரிவு




குழுக்களின் பிரதித் தவிசாளராக அங்கஜன் இராமநாதன் தெரிவுசெய்யப்பட்டார். அவருடைய பெயரை தொழில் அமைச்சர் நிமல் சிறிபால.டி சில்வா முன்மொழிந்ததுடன், இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க வழிமொழிந்தார்.

அங்கஜன் இராமநாதன் அவர்கள் கொழும்பு இந்துக் கல்லூரி, கொழும்பு சர்வதேச கல்லூரி மற்றும் கொழும்பு சென். தோமஸ் கல்லூரி ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியைப் பூர்த்திசெய்தார். வர்த்தக முகாமைத்துவம் தொடர்பில் இவர் அவுஸ்திரேலியாவில் பட்டம் பெற்றுள்ளார்.

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாகாண சபைக்கான தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டு 10,034 வாக்குகளைப் பெற்று மாகாண சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக சுதந்திரக் கட்சி சார்பில் நியமிக்கப்பட்டார். 2015 யாழ், கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு இணைத்தலைவராக நியமிக்கப்பட்டார். 2018ஆம் ஆண்டு கமத்தொழில் பிரதியமைச்சராகப் பதவியேற்றார். 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் அதிகூடிய விரும்புவாக்குகளைப் பெற்று (36,365) பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

## சபை முதல்வர் பதவிக்கு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னர் கௌரவ சபை முதல்வராக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன பதவியேற்றுக்கொண்டார். கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி முற்பகல் 8.46 மணியிலான சுபவேளையில் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பாராளுமன்றத்தின் பதினேழாவது சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை பாராளுமன்றப் பணியாளர்கள் அன்புடன் வரவேற்றனர். மதவழிபாடுகளைத் தொடர்ந்து உத்தியோகபூர்வ ஆவணத்தில் கையெழுத்திட்டு சபை முதல்வர் தனது கடமைகளைப் பெறுப்பேற்றுக்கொண்டார்.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அவர்கள் இவ்வருடம் ஜனவரி மாதம் 03ஆம் திகதி முதல் மார்ச் 02ஆம் திகதி வரை சபை சபை முதல்வராகச் செயற்பட்டிருந்தார். அதற்கு முன்னர் எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரில் ஆளும் கட்சியின் முதற்கோலாசானாகவும் பணியாற்றியிருந்தார்.

## ஆளும் கட்சியின் முதற்கோலாசானாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பர்னாந்து நியமனம்



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஆளும் கட்சியின் முதற்கோலாசானாக பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பர்னாந்து கடந்த 20ஆம் திகதி பதவியேற்றுக்கொண்டார். ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெறுவதற்கு முன்னர் அவர் தனது பதவிகளை உத்தியோகபூர்வமாகப் பெறுப்பேற்றுக்கொண்டார்.

## டிலான் பெரேரா, ஜயந்த கெடகொட ஆளும் கட்சியின் பிரதி முதற்கோலாசான்களாக நியமனம்





பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியின் பிரதி முதற்கோலாசான்களாக (கொரடா) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா மற்றும் ஜயந்த கெடகொட ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், ஆளும் கட்சியின் உதவி முதற்கோலாசான்களாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான ஜகத் புஷ்பகுமார, மொஹம்மட் முஸம்மில் மற்றும் அசங்க நவரட்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பதவிகளுக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா மற்றும் ஜயந்த கெடகொட ஆகியோர் ஆளும் கட்சியின் பிரதம கொரடா நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பர்னாந்து முன்னிலையில் கடந்த ஓகஸ்ட் 21ஆம் திகதி பதவியேற்றுக்கொண்டனர்.

அத்துடன், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான ஜகத் புஷ்பகுமார, மொஹமட் முஸம்மில், அசங்க நவரத்ன ஆகியோரும் பதவியேற்றுக்கொண்டனர்.

சிறப்புக் கட்டுரை

# புதிய பாராளுமன்றத்திற்கு பன்னிரண்டு பெண் பிரதிநிதிகள்



2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 20ஆம் திகதி ஆரம்பமான ஒன்பதாவது பாராளுமன்றத்திற்கு 12 பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இது மொத்தமாக 5.3 சதவீதம் ஆகும். இந்த பெண் பாராளுமன்ற பிரதிநிதிகள் பல்வேறு வகையிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக உள்ளனர்.

இதில் பெரும்பாலான பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் நீதித்துறையிலும் ஆசிரியர் துறையிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். அதன்படி, இம்முறை பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே சட்டத்துறை மற்றும் ஆசிரிய துறையில் சம எண்ணிக்கையிலானவர்களின் பிரதிநிதித்துவம் அமைந்துள்ளது. அதன்படி 25 சதவீதமான பெண்கள் இத்துறையில் தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளில் இருவர் விசேட வைத்தியர்களாக இருப்பதோடு அது பெண் பிரதிநிதித்துவ மொத்த சதவீதத்தில் 16 வீதமாகும்.

தேசியப்பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பெண் பாராளுமன்ற உறுப்பினரான கலாநிதி பட்டம் பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர், கலைத்துறையிலிருக்கும் ஒரு தொழில் முயற்சியாளர், விமான பணிப்பெண் மற்றும் சமூக சேவையாளர் ஆகியோரும் குறித்த 12 பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுள் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை பாராளுமன்றத்திற்கு அதிகமான பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீங்கா பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அதேவேளை அவர்களின் எண்ணிக்கை 8 ஆகும். அதில் கடந்த பாராளுமன்றத்திலும் பிரதிநிதித்துவம் செய்து இம்முறையும் தெரிவான சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி (இரத்தினபுரி), இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் சுதர்ஷனி பர்னாந்துபுள்ளே (கம்பஹா), பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க (காலி) ஆகியோர் உள்ளடங்குவர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பாக புதிதாக இம்முறை பாராளுமன்றத்திற்கு மூன்று பேர் தேர்தலின் ஊடாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ராஜிகா விக்ரமசிங்ஹ (கேகாலை) முதிதா டி. சொய்சா, (இரத்தினபுரி) மற்றும் கோகிலா ஹர்ஷனி குணவர்தன (கம்பஹா) ஆகியோரே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்களாகும். மேலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பாக தேசியப் பட்டியலில் தெரிவான விசேட வைத்தியர் சீதா அரம்பேபொல மற்றும் மஞ்சுளா விஜயகோன் திசாநாயக்க ஆகியோர் இம்முறை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

நீண்டகாலம் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய சட்டத்தரணி தலதா அத்துகோரல (இரத்தினபுரி) மற்றும் கடந்த பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய ரோஹினி குமாரி கவிரத்ன (மாத்தறை) ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பொது தேர்தலின் ஊடாக தெரிவு செய்யப்பட்டிருந்த பெண் பிரதிநிதிகள் ஆவர். அக்கட்சியின் தேசிய பட்டியலில் இருந்து டயானா கமகே தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அதுமட்டுமல்லாது, தேசிய மக்கள் சக்தி சார்பாக கலாநிதி ஹரினி அமரசூரிய தேசிய பட்டியலினூடாக பாராளுமன்றத்துக்கு இம்முறை முதன்முறையாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

## சட்டத்தரணி பவித்ராதேவி வன்னியாராச்சி

முன்னாள் சிரேஷ்ட அரசியல்வாதியான தர்மதாச வன்னியாராச்சி அவர்களின் மகளான பவித்ராதேவி வன்னியாராச்சி முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களின் வழியில் 1990 ஆம் ஆண்டில் அரசியலுக்குள் பிரவேசித்தார். அதன்பிறகு, 1993 ஆம் ஆண்டில் சப்ரகமுவ பிரதேச சபையை பிரதிநிதித்துவப்படுத்தி இருந்ததோடு 1994 ஆம் ஆண்டு இரத்தினபுரி மாவட்டம் சார்பாக பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். 2000 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிச் செயலாளராக இவர் தெரிவுசெய்யப்பட்டதோடு 2008 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் இளைஞர் ஒன்றியத்தின் தலைவராகவும் செயற்பட்டார்.

2001 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரையிலும் அதன் பின்னர் 2015ம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு வரையிலும் எதிர்க்கட்சியின் பிரதான செயற்பாட்டாளராக செயற்பட்டதோடு 2019 ஆம் ஆண்டு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள், சமூக பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் தேசிய வைத்திய அமைச்சராகவும் செயற்பட்டார். கொவிட் நோய் தொற்றுக்காலத்தில் பாரிய சேவையாற்றி இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷனி பர்னாந்துபுள்ளே

1984 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்தில் வைத்திய படிப்பை நிறைவுசெய்த இவர் 1993 ஆம் ஆண்டு பொது சுகாதாரம்தொடர்பான உயர் கல்வியை அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழகத்திலும் அதன் பின்னர் பிரித்தானியாவின் லண்டன் சிறுவர் சுகாதார நிறுவனத்திலும் நிறைவுசெய்தார். 2000 ஆண்டு முதல் பொது சுகாதாரம் தொடர்பான விசேட வைத்திய நிபுனராக சேவையாற்றினார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் விசேட வைத்தியர் சுதர்ஷனி பர்னாந்துபுள்ளே தனது கணவரான முன்னாள் சிரேஷ்ட அரசியல்வாதியான ஜெயராஜ் பர்னாந்துபுள்ளே அவர்களின் திடீர் மரணத்தின் பின்னர் அரசியலுக்குள் பிரவேசித்தார். அவர் எட்டாவது பாராளுமன்றத்தில் பெண்கள் மற்றும் பால்நிலை பற்றிய துறைசார் மேற்பார்வைகுழுவின் உறுப்பினராகவும் செயற்பட்டிருந்தார். சிறுவர்கள் தொடர்பான பாராளுமன்ற ஒன்றியத்தின் தவிசாளராகவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் உறுப்பினராகவும் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## சட்டத்தரணி தலதா அத்துகோரல

முன்னாள் நீதி அமைச்சரான சட்டத்தரணி தலதா அத்துகோரல ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவரான காமினி அத்துகோரல அவர்களின் சகோதரியாவார். தனது சகோதரரின் மரணத்துக்குப் பின்னர் தனது அரசியல் பயணத்தை இரத்தினபுரி மாவட்டத்தில் ஆரம்பித்தார். 2004 ஆம் ஆண்டு முதன்முறையாக பாராளுமன்றத்துக்கு பிரவேசித்த அவர் ஐக்கிய தேசிய கட்சியின் பெண்கள் அமைப்பின் தலைவராகவும் தேர்தல் தொடர்பான செயலாளராகவும் கொழும்பு செயற்குழுவின் தலைவராகவும் செயற்பட்டிருந்தார். 2015 ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராகவும் 2018 ஆம் ஆண்டில் நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சராகவும் செய்யப்பட்டிருந்தார். இம்முறை ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டார். தற்போது அங்கட்சியின் பலாங்கொட தொகுதி அமைப்பாளராக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரோஹினி குமாரி கவிரத்ன

ஆசிரியராக தொழிலாற்றிய ரோஹினி குமாரி கவிரத்ன தனது கணவரான சஞ்சீவ கவிரத்ன அவர்களுக்கு பிறகு மாத்தளை மாவட்டத்தின் தனது அரசியலை ஆரம்பித்தார். எட்டாவது பாராளுமன்றத்தின் கல்வி தொடர்பான உப குழுவின் தவிசாளராக பாரிய சேவையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

பாராளுமன்ற உறுப்பினரான கீதா சமன்மலி குமாரசிங்க, ஒரு விருதுபெற்ற சினிமா நடிகர், இயக்குனர், தொழில் முயற்சியாளராவார். வாழ்நாளில் ஒரு முறை மாத்திரமே கிடைக்கும் கலாபூசணம் விருதையும் அவர் வென்றுள்ளார். சிறிபோ அய்யா, லொக்கு துவ, பாலம யட்ட உள்ளிட்ட சிறப்பான பல படைப்புகளுக்கு ஒத்துழைப்பு நல்கியுள்ள அவர் 2010 ஆம் ஆண்டில் முதல் முறையாக தென் மாகாணசபையின் பிரதிநிதியாக அரசியலுக்குள் பிரவேசித்தார். எட்டாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக இருந்த அவர் இம்முறையும் காலிமாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## ராஜிகா விக்ரமசிங்ஹ

சப்பிரகமுவ மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ஸ்ரீலால் விக்கிரமசிங்க அவர்களின் மனைவியான இவர் சிறந்த சமூக சேவையாளராவார். பொதுஜன பெரமுன கட்சி சார்பாக கேகாலை மாவட்டத்தின் பெண்கள் முன்னணியின் நிரந்தர உறுப்பினராகவும் இவர் செயற்படுகின்றார்.

## முதித்தா பிரசாந்தி டி சொய்சா

எட்டாவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கும்போது மரணமடைந்த இரத்தினபுரி மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் அமர் ரஞ்சித் டி சொய்சா அவர்களின் மனைவியான முதித்தா பிரசாந்தி டி சொய்சா ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் இறக்குவானை தேர்தல் தொகுதி அமைப்பாளராவார்.

தன்னார்வ ஆசிரியராக சேவையாற்றிய இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரக்குவானை அதிகார சபையின் தலைவராகப் செயற்பட்டதோடு சப்பிரகமுவ மாகாணசபையின் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராகவும் செயற்பட்டார். ரஞ்சித் சொய்சா அவர்களின் மரணத்தின் பின் அரசியலில் பிரவேசித்த இவர் இரத்தினபுரி மாவட்டத்தின் விருப்பு வாக்குகளின்படி ஏழாவது இடத்தைப்பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவானார்.

## கோகிலா ஹர்ஷிணீ குணவர்தன

கோகிலா ஹர்ஷிணீ குணவர்தன அவர்கள் மறைந்த மாகாண சபை உறுப்பினர் தேசபந்து நாமல் குணவர்தன அவர்களின் சகோதரியாவார். தனது சகோதரரின் இறப்பிற்குப் பின்னர் கம்பஹா மாவட்டத்தின் அரசியலுக்கு அறிமுகமாகி மீரிகம பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் மேல் மாகாண சபையின் உறுப்பினராக வும் நீண்டகாலம் சேவையாற்றியுள்ளார். இவர் விமானப் பணிப்பெண்ணாக பணியாற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விசேட வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல

முன்னாள் மேல் மாகாண ஆளுநரான சீதா அரம்பேபொல தொண்டை, காது, மூக்கு தொடர்பான விசேட வைத்தியராவார். ஆளுநராக சேவையாற்றிய போது கழிவகற்றல் மற்றும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை சிறப்பாக செயற்படுத்தியிருந்ததோடு தற்போது பேசுபொருளாகவுள்ள கொவிட்-19 நோய் தொடர்பான விசேடசெயலணியின் உறுப்பினராகவும் செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மஞ்சுலா விஜயகோன் திசாநாயக்க

எட்டாவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருக்கும்போது மரணமடைந்த குருநாகல் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் சாலிந்த திசாநாயக்க அவர்களின் மனைவியே மஞ்சுலா விஜயகோன் திசாநாயக்க ஆவார். இவர் ஆசிரிய ஆலோசகராக சேவையாற்றியிருந்ததோடு முதன் முறையாக பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டயனா கமகே

தேசியப்பட்டியலில் பாராளுமன்றத்துக்கு முதன்முறையாக தெரிவான டயனா கமகே சட்டத்துறை, நிர்வாகம் தொடர்பிலும் முதுநிலைப் பட்டம் பெற்றவராவார். 2004 ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு அரசியலுக்கு நுழைந்திருந்தார்.

## கலாநிதி ஹரினி அமரசூரிய

தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி கலாநிதி ஹரினி அமரசூரிய இம்முறை முதலாவது முறையாக பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். எடின்பரோ பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டப்படிப்பை நிறைவுசெய்த இவர் திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராவார். திறந்த பல்கலைக்கழகத்தில் பணியாற்றுவதற்கு முன்னர் சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளவியல் தொடர்பாக பல வருடங்கள் விசேட நிபுணத்துவம் பெற்று சேவையாற்றியிருந்தார்.

*துமிந்த விக்கிரமசிங்ஹ*
*பொதுச்சேவை அதிகாரி*
*தொடர்பாடல் திணைக்களம்*

செய்தி

# புதிய சபாநாயகருக்கு மஹா சங்கத்தினர் ஆசி




புதிய சபாநாயகர் தெரிவுசெய்யப்பட்ட தினத்துக்கு மறுநாள் பாராளுமன்றத்துக்கு வருகைதந்த மஹா சங்கத்தினர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களுக்கு ஆசி வழங்கினர்.

நாரஹேன்பிட்ட அபயராம விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தினர் புதிய சபாநாயகரை ஆசிர்வதிக்கும் வகையில் பிரித் பாராயணம் செய்ததுடன் புதிய பதவியில் பணிகளை மேற்கொள்வது தொடர்பில் அறிவுரைகளையும் வழங்கினர்.


சிறப்புக் கட்டுரை


# பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் அட்டவணை





பாராளுமன்றத்தில் காணப்படும் விசேட அம்சங்களில் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் சகல உறுப்பினர்களினதும் பெயர்கள் மற்றும் கையொப்பங்களைக் கொண்டதாகக் காணப்படும் 'பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் அட்டவணை' விசேடமானதாகும். மிகவும் பெறுமதி வாய்ந்த இது அண்மையில் ஆரம்பமான ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வில் பயன்படுத்தப்பட்டது. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்குத் தகுதி பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கையான 225இல் 196 பேர் பொது மக்களின் தெரிவின் மூலமாகவும், எஞ்சிய 29 பேர் தேசியப் பட்டியலின் ஊடாகவும் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் முதலாவது அமர்வு நாளில் முதலாவது செயற்பாடாக கௌரவ சபாநாயகரின் தெரிவு இடம்பெறும். இத்தெரிவு ஏகமனதான தெரிவாக அல்லது இரகசிய வாக்கெடுப்பின் மூலமானதாக இருக்கலாம். தெரிவு செய்யப்பட்ட சபாநாயகர் பதவிச் சத்தியம் செய்துகொண்ட பின்னரே சபாமண்டபத்திலிருக்கும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் சபாநாயகர் முன்னிலையில் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை எடுத்துக்கொள்வர். அதனைத் தொடர்ந்து பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோரின் தெரிவு இடம்பெறும்.






புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட சபாநாயகரிடம் பாராளுமன்ற செயலாளர் நாயகம் சம்பிரதாய பூர்வமாக 'பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் அட்டவணை' புத்தகத்தை வழங்கி சபாநாயகரின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்வார். அதன் பின்னர் பிரதமரும் அதனைத் தொடர்ந்து ஏனைய சகல பாராளுமன்ற உறப்பினர்களும் தமது பெயர்களை எழுதி அப்புத்தகத்தில் கையொப்பமிடுவர்.



மேலும் நிலையியற் கட்டளை இலக்கம் 03ற்கு அமைய பாராளுமன்றம் கூடும் முதல் நாளில் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் அதன் பின்னர் எந்தவொரு நாளிலும் 22வது நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய பாராளுமன்ற அமர்வு தினமொன்றில் முதலாவது நடவடிக்கையாக பதவிச் சத்தியம் செய்துகொள்ள முடியும். சபாநாயகர் முன்னிலையில் பதவிச் சத்தியம் செய்து, பாராளுமன்ற செயலாளர் நாயகம் முன்னிலையில் காணப்படும் 'பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் அட்டவணை' புத்தகத்தில் கையொப்பமிடமுடியும்.

*எஸ்.ஜெயபிரகாஷ்*
*பொதுமக்கள் வெளித்தொடர்பு அலுவலக ஒருங்கிணைப்பாளர்*
*தொடர்பாடல் திணைக்களம்*

சிறப்புக் கட்டுரை

# படைக்கல சேவிதர் பதவி அதன் வரலாறு மற்றும் பணிகள்



கௌரவ சபாநாயகர் மற்றும் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்துக்கு உயரிய சேவைகளை உரிய காலத்தில் திறமையான முறையில் வழங்கி, பாராளுமன்றத்தின் செயற்பாடுகளுக்கு வசதிகளை செய்து கொடுப்பது படைக்கல சேவிதர் திணைக்களத்தின் பணியாகும்.

படைக்கல சேவிதர் சபையின் பணிப்புரைகளை செயற்படுத்துவதற்கு சட்ட ரீதியாக அதிகாரம் கொண்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரி என்பதுடன் செங்கோலை தாங்கியவர் என்றவகையில் சபையின் சிறப்புரிமைகளை பாதுகாப்பது அவரின் பொறுப்பாகும். படைக்கல சேவிதர் பதவியின் ஆரம்பம் பிரித்தானிய பாராளுமன்ற வரலாற்றின் ஆரம்ப கட்டத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி. 1279 ஆம் ஆண்டில், இங்கிலாந்தின் முதலாம் எட்வர்ட் மன்னர் 20 தனிப்பட்ட மெய்ப்பாதுகாவலர்களை கொண்ட படைக்கல சேவிதர்களை நியமித்தார். அது படைக்கல சேவிதர் பதவியின் ஆரம்பமாகும். இற்றைக்கு 80 வருடங்களுக்கு முன்பு பிரான்சின் பிலிப் ஒகஸ்ட்டஸ் மன்னருக்கு தனிப்பட்ட மெய்ப்பாதுகாவலர்களை கொண்ட படைக்கல சேவிதர்கள் இருந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

பிரித்தானிய பாராளுமன்றத்தின் முதலாவது படைக்கல சேவித்தர் நிக்கலஸ் மௌடிட் என்பதுடன் அவர் கி.பி. 1415 இல் இங்கிலாந்தின் இரண்டாவது ரிச்சர்ட் மன்னனால் பிரித்தானியாவின் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகருக்கு சேவையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டார். படைக்கல சேவித்தர் பதவி வரலாற்றில் "சார்ஜெண்ட்", "செங்கோலை ஏந்தியவர்", "பிரபுக்களுக்கான ஆசனங்களை ஒதுக்கீடு செய்பவர்" (Gentleman Usher) போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டது.

பிரித்தானிய பாராளுமன்றத்தின் பரிணாமத்துடன் பிரதிநிதிகள் சபையின் அக்கிராசனத்தை ஏற்றிருந்த மன்னருக்கு பதிலாக மன்னரின் பிரதிநிதியாக சபாநாயகர் அக்கிராசனத்தை ஏற்றார். இதன்போது சபாநாயகருக்கு வழங்கப்படும் கௌரவமாக மற்றும் மன்னரின் அதிகாரத்தை பிரதிபலிக்கும் வகையில் அதுவரை மன்னரின் தனிப்பட்ட பாதுகாவலராக இருந்த படைக்கல சேவிதருக்கு செங்கோலின் பொறுப்பை ஏற்கும் பணி வழங்கப்பட்டது.

1931 ஜூலை மாதம் 20ஆம் திகதி செங்கோலொன்று இருப்பது மற்றும் படைக்கல சேவிதர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதற்கான அவசியத்தை அப்போதைய சபாநாயகர் கலாநிதி பிரான்சிஸ் மொலமுரே, சுசந்த டி பொன்சேகா, மேஜர் ஜே. டப்ளிவ். ஓல்ட்பீல்ட், கலாநிதி வீ.ஆர். ஷொக்மன், டீ.டீ. அத்துலத்முதலி மற்றும் அப்போதைய அரச மந்திரி சபையின் செயலாளர் ஜீ.என். பாக்கர் அகியோரால் முதன்முறையாக கருத்தில் கொள்ளப்பட்டது.

படைக்கல சேவிதரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள், படைக்கல சேவிதரின் பணியாட்கள் மற்றும் கலரிக்கு விருந்தினர்களை அழைத்துச்செல்லும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் என்பன 1933 அரச மந்திரி சபையின் போதே கருத்தில் கொள்ளப்பட்டது.

கௌரவ சபாநாயகரின் அனுமதியுடன் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தினால் அரசியலமைப்பின் 65 (3)க்கு அமைய படைக்கல சேவிதர் நியமிக்கப்படுவார். எம். இஸ்மாயில், எம். பி.ஈ. என்பவர் முதலாவது படைக்கல சேவிதராவார். அவர் 1947 முதல் 1961 வரை அந்தப் பதவியில் பணியாற்றினார். அதனை அடுத்து ஜே.ஆர். சில்வா (1961 முதல் 1970), ரோனி அபேசிங்க (1970 முதல் 1996), விஜய பல்லியகுருகே (1996 முதல் 2006) மற்றும் அனில் பராக்கிரம சமரசேகர (2006 முதல் 2018) ஆகியோர் படைக்கல சேவிதர் பதவியில் பணியற்றினர்.

பாராளுமன்ற சிறப்பு உரிமைகளின் பாதுகாவலரான கௌரவ சபாநாயகிரின் பணிப்புரைகளை செயற்படுத்துவதற்கு சட்டத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பிரதான அதிகாரியான படைக்கல சேவிதர் செங்கோலின் பொறுப்பை ஏற்பதுடன் சபையினுள் தலைமையினால் வழங்கப்படும் பணிப்புரைகளை செயற்படுத்தும் அதிகாரியாவார். நிலையியற் கட்டளை 77–80 க்கு அமைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலைமையின் அதிகாரத்துக்கு கட்டுப்படாமல் அல்லது புறக்கணிப்பு செய்வதை காரணமாக கொண்டு அல்லது வேண்டுமென்றே சபையின் நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுத்தல் அல்லது பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளை மீறுதல் என்பவற்றுக்காக குறித்த உறுப்பினரை சபையிலிருந்து அகற்றுவதற்கு அல்லது குறித்த உறுப்பினரின் பாராளுமன்ற சேவையை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்வதற்கு தலைமையினால் வழங்கப்படும் பணிப்புரையை செயற்படுத்துவதற்கு படைக்கல சேவிதருக்கு அதிகாரம் காணப்படுகின்றது. சாட்சியாளர் ஒருவர், குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது வேறு நபர் ஒருவரை

சபையின் தடை எல்லைக்கு அழைக்கப்படும் போது அவ்வாறான நபர்களை அழைத்துச் செல்லும் அதிகாரமும் படைக்கல சேவிதருக்கு காணப்படுகின்றது. அமர்வு தினமொன்றில் பாராளுமன்ற வளாகத்தினுள் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளல் அல்லது சட்டத்திற்கு முரணான வகையில் கட்டடத் தொகுதிக்குள் நுழைதல், தடை ஏற்படுத்துதல் அல்லது அவ்வாறான காரியங்களில் ஈடுபடுவதற்கு ஏனையவர்களுக்கு உதவி செய்தல் என்பவற்றுக்காக சபாநாயகரினால் வழங்கப்படும் எழுத்துமூல அல்லது வாய்மொழி மூல பணிப்புரைக்கு அமைய எந்த ஒரு நபரையும் அழைப்பாணை இன்றி கைது செய்வதற்கு, பாராளுமன்ற (அதிகாரங்கள் மற்றும் சிறப்பு உரிமைகள்) சட்டத்தின் 21 மற்றும் 29 ஆகிய பிரிவுகளின் கீழ் குறித்த நபருக்கு வழங்கப்படும் ஏதாவது ஒரு தண்டனை தொடர்பில் பாராளுமன்றத்தினால் தீர்மானம் எடுக்கப்படும் வரை குறித்த நபரை கைது செய்து வைத்துக்கொள்வதற்கான அதிகாரம் படைக்கல சேவிதருக்கு காணப்படுகின்றது. கைது செய்யப்பட்ட அத்தகைய நபர்களை ஒப்படைப்பது உட்பட, சபாநாயகரின் பணிப்புரைக்கு அமைய உரிய செயன்முறைகள் படைக்கல சேவிதரினால் மேற்கொள்ளப்படும்.

பொருத்தமற்ற உடை அணிந்து கொண்டு பாராளுமன்ற சபா மண்டபத்துக்குள் நுழையும் உறுப்பினர் ஒருவருக்கு தாமதமின்றி சபா மண்டபத்தில் இருந்து வெளியேறுமாறு கோரிக்கை விடுப்பதற்கு படைக்கல சேவிதருக்கு முடியும். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் சபையினுள் ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பப்படும் போது அது தொடர்பில் தாமதமின்றி கண்டறியுமாறு சபாநாயகரினால் படைக்கல சேவிதருக்கு பணிக்கப்படும் அதேவேளை, குறித்த விடயம் தொடர்பில் பக்கச்சார்பற்ற அறிக்கை ஒன்றை வழங்குவதற்கு படைக்கல சேவிதர் பொறுப்பாகவுள்ளார்.

தனது கடமைகளை மேற்கொள்வதற்காக படைக்கல சேவிதருக்கு சபா மண்டபத்தில் பிரதான நுழைவாயிலுக்கு அருகாமையில் விஷேட ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. தனது சீருடையின் ஓர் அங்கமாக சபா மண்டபத்துக்குள் ஆயுதம் ஒன்றை (வாள்) கொண்டுசெல்லும் அனுமதியுள்ள ஒரே நபர் படைக்கல சேவிதராவார். பாராளுமன்ற அமர்வு இடம்பெறும் சாதாரண தினங்களில் படைக்கல சேவிதர் வெள்ளை நிற சீருடை அணிந்திருப்பதுடன் வைபவங்களின் போது விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கருப்பு நிற வைபவ சீருடை அணிவது வழக்கம். படைக்கல சேவிதர் பதவி லெப்டினன் ஜெனரல் ஒருவரின் பதவிக்கு சமனானதாகும். படைக்கல சேவிதரின் பணிகளாக வைபவங்கள், சபா மண்டபத்தின் பாதுகாப்பு, விருந்தினரை முகாமை செய்தல், இட ஒதுக்கீடு மற்றும் திணைக்கள விவகாரங்களும் காணப்படுகின்றன.


படைக்கல சேவிதர் பொதுநலவாய படைக்கல சேவிதர்களின் சங்கத்தின் அங்கத்தவர் ஒருவராக இருப்பதுடன் பாராளுமன்ற முகாமைத்துவம் பற்றிய புதிய மாற்றங்கள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக அந்த சங்கத்தின் கூட்டங்களில் கலந்துகொள்வார். படைக்கல சேவிதர் பதவியேற்றல் மற்றும் ஓய்வு பெறுதல் என்பன சம்பிரதாயபூர்வமாக பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படும். அதேபோன்று, படைக்கல சேவிதர் ஒருவர் ஓய்வு பெறும் போது குறித்த படைக்கல சேவிதரின் சேவையை பாராட்டும் வகையில் பிரேரணை ஒன்றை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தில் ஒரு நாள் ஒதுக்கப்படும்.



*நரேந்திர பெர்னாண்டோ*
*படைக்கல சேவிதர்*
*இலங்கை பாராளுமன்றம்.*

**செய்தி**

# பாராளுமன்ற தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது



பாராளுமன்ற நிலையியற் கட்டளை 114 இலக்கத்துக்கு அமைய ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் சேவைக்கான தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

கௌரவ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களை தவிசாளராகவும், அரசியல் கட்சிகளின் தலைவர்களையோ அல்லது அவர்களின் நியமத்தவர்களையோ உள்ளடக்கிய பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்டதாக தெரிவுக்குழு அமைந்துள்ளது.

கௌரவ அமைச்சர்களான நிமல் சிறிபால.டி சில்வா, தினேஷ் குணவர்த்தன, ஜோன்ஸ்டன் பர்னாந்து, டக்ளஸ் தேவானந்தா, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவங்ஸ, பிரசன்ன ரணதுங்க, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியல்ல, கயந்த கணாதிலக, ரவூப் ஹக்கீம், விஜித ஹேரத், செல்வம் அடைக்கலாதன் ஆகியோர் தெரிவுக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

**செய்தி**

# அரசியலமைப்புப் பேரவையின் முன்னாள் தலைவரும், முன்னாள் சபாநாயருமான கரு ஜயசூரியவுக்கு நன்றி பாராட்டு



முன்னாள் சபாநாயகரும், அரசியலமைப்புப் பேரவையின் முன்னாள் தலைவருமான கரு ஜயசூரிய அவர்கள் அரசியலமைப்புப் பேரவையை வழிநடத்திச் சென்றமை தொடர்பில் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் உள்ளிட்ட பேரவையின் உறுப்பினர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

அரசியலமைப்பு பேரவை கூட்டத்தை நட்புறவான சூழ்நிலையிலும், அனைத்து உறுப்பினர்களின் கருத்துகளுக்கும் மதிப்பளித்து அவற்றுக்கும் இடமளிக்கும் வகையிலும் கூட்டங்கள் நடத்தப்பட்டமை தொடர்பில் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் நன்றி தெரிவித்தார். முன்னாள் சபாநாயகர் தொடர்பான பிரதமரின் இந்தக் கருத்துடன் தானும் இணங்குவதாக அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கடந்த ஒகஸ்ட் 03ஆம் திகதி சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற அரசியலமைப்புப் பேரவையின் இறுதிக் கூட்டத்திலேயே இவ்வாறு நன்றி பாராட்டப்பட்டது. அரசியலமைப்புப் பேரவையின் தலைவராகப் பங்கேற்கும் இறுதிக் கூட்டம் இதுவென்றும், இதுவரை காலமும் ஒத்துழைப்பு வழங்கிய பிரதமர் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கு கரு ஜயசூரிய அவர்கள் நன்றிகளைத் தெரிவித்தார். அரசியலமைப்புப் பேரவையில் சகல தரப்பினரினதும் கருத்துக்களைப் பெற்று அவர்களின் இணக்கப்பாட்டுடனேயே சகல தீர்மானங்களும் எடுக்கப்பட்டதாகவும், தலைவராகப் பணியாற்றிய காலப்பகுதியில் எந்தவிதமான கருத்துவேறுபாடுகளும் இன்றி ஏகமனதாக முடிவுகளை எடுக்கக் கிடைத்தமைக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், அரசியலமைப்பு பேரவை கூட்டத்தை வினைத்திறனாகவும், உரிய காலத்திலும் நடத்துவதற்கு பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க மற்றும் பாராளுமன்ற பணியாளர்களிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்புத் தொடர்பிலும் கரு ஜயசூரிய அவர்கள் நன்றிகளைத் தெரிவித்தார். அரசியலமைப்புப் பேரவைக்கு வழங்கிய ஒத்துழைப்புக் குறித்து சகல சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர்களுக்கும் அவர் நன்றி கூறினார்.

# மக்கள் வாக்குகளால் இளமையான ஒன்பதாவது பாராளுமன்றம்

நாட்டு மக்கள் சார்பில் சட்டமியற்றும் பிரதான கேந்திர நிலையம் பாராளுமன்றமாகும். எதிர்காலத்துக்குப் பயனளிக்கும் வகையில் முடிவுகளை எடுக்கும்போது அத்தகைய கேந்திர நிலையத்தில் இளம் பிரதிநிதிகளின் இருப்பானது ஆரோக்கியமான ஜனநாயகத்தை விஸ்தரிப்பதற்கு உதவியாக இருக்கும். இது தொடர்பான சாதகமான நம்பிக்கை கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி ஆரம்பமான ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஊடாக நிறைவேறியுள்ளது.

வயதின் அடிப்படையில் பார்க்கும்போது 25-40 வயதுக்கு இடைப்பட்ட 26 உறுப்பினர்கள் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டிருப்பதுடன், இவர்களில் ஐவர் 25-30 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருப்பதை சாதகமான சூழ்நிலையாகக் கருதமுடியும். தொழில் ரீதியாக பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய இளம் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையானது 13 வீதமாக அதிகரித்திருப்பதுடன், 41-50 வயதுக்கு இடைப்பட்ட 67 புதிய உறுப்பினர்கள் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.



இம்முறை மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட மிகவும் வயது குறைந்த உறுப்பினர் கௌரவ தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களாகும். இவருடைய தந்தையாரான கௌரவ முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மறைவைத் தொடர்ந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட இவர் ஓர் சட்டத்தரணியாவார். 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09ஆம் திகதி பிறந்த இவர் அமைச்சரவையில் உள்ள மிகவும் குறைந்த வயதுடைய அமைச்சராவார். இதற்கு முன்னர் பாராளுமன்ற வரலாற்றில் மிகவும் குறைந்த வயதில் அமைச்சுப் பொறுப்பை வகித்தவர் கௌரவ துமிந்த திஸாநாயக்க ஆவார். தனது 25வது வயதிலேயே அவர் அமைச்சுப் பொறுப்பை ஏற்றிருந்தார்.







அத்துடன், 25-30 வயதுப் பிரிவில் காணப்படும் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களில் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இம்முறை முதல் தடவையாக பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சாணக்கியா ராஜபுத்திரன் இராசமாணிக்கம் (30 வயது), மாத்தறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட முப்பது வயதுடைய நிபுண ரணவக்க, மொனராகலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி முதல் தடவையாக பாராளுமன்றத்துக்குத் தெரிவான டொக்டர் கஜஷான் நவனந்த ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பட்டதாரிகள் என்பது விசேட அம்சமாகும்.



பொது மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் 31-40 வயதுப் பிரிவைச் சேர்ந்த 21 உறுப்பினர்கள் காணப்படுவதுடன், இதில் முதற் தடவையாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட 09 உறுப்பினர்கள் அடங்குகின்றனர். இந்த வயதுப் பிரிவில் பாராளுமன்றத்தைப் பல தடவைகள் பிரதிநிதித்துவப்படுத்தி இம்முறை பொது ஜன பெரமுனை சார்பில் மீண்டும் தெரிவுசெய்யப்பட்ட கௌரவ இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் அடங்குகின்றார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கு மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் 41-50 வயதுப் பிரிவைச் சேர்ந்த 67 பாராளுமன்ற உறுப்பினர்கள் காணப்படுவதுடன், இதில் முதல் தடவையாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட பெண் உறுப்பினர்களில் இருவரான கம்பஹா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கோஹிலா ஹர்ஷினி குணவர்த்தன மற்றும் கேகாலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரஜிகா விக்ரமசிங்ஹ ஆகியோரும் அடங்குகின்றனர்.

51-60 வயதுப் பிரிவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 54 ஆகும் என்பதுடன், இது மொத்த எண்ணிக்கையில் 27 வீதமாகும். ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் மீண்டும் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் அநுரகுமார திஸாநாயக மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, மஹிந்த அமரவீர, பாட்டளி சம்பிக ரணவக, பழனி திகாம்பரம், ரவூப் ஹக்கீம், மனோ கணேசன் என இந்த வயதுப் பிரிவில் உள்ளடங்குகின்ற உறுப்பினர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளில் பதவிகளை வகிப்பதுடன் நீண்டகாலமாகப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள் பிரதிநிதிகளில் 09 பேர் 71-80 வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இதில் கௌரவ பிரதமரும், நிதி, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ நீர்ப்பாசன அமைச்சரும் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர். 81-90 வயதுப் பிரிவில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதிதித்துவப்படுத்தும் வடமாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இரத்தினபுரி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரா.சம்பந்தன் ஆகியோர் அடங்குகின்றனர்.

*ரிஷ்மியா நூட்டான் (பொதுமக்கள் வெளித்தொடர்பு அதிகாரி - தொடர்பாடல் திணைக்களம்)*

சிறப்புக் கட்டுரை

# “அரசியலில் பெண்களுக்கு சமமான வாய்ப்புக்களை வழங்க சரியான திட்டம் தேவை”



கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர்
விசேட வைத்திய நிபுணர் பேராசிரியர் சந்திரிகா என் விஜேரத்ன

**இந்த நாட்டில் பெண்களின் கல்வி முறையை மேம்படுத்துவதற்கு நீங்கள் முன்வைக்கின்ற யோசனை எவை?**
கல்வி என்பது பட்டத்தைப் பெறுவது மாத்திரமல்ல, வாழ்க்கையைப் படிப்பதும் ஒரு கல்வியேயாகும். பெண்களுக்கு இன்று சமூகத்தில் சிறந்த அந்தஸ்துக் கிடைத்துள்ளது. பௌத்த மதத்தை அடிப்படையாகக் கொண்ட நாட்டில் வீடுகளில் அம்மா கடவுளுக்கு சமமானவர் என்ற கோட்பாட்டுடனேயே சமூகங்களின் வாழ்க்கை காணப்படுகிறது. தொழிற்சந்தைக்கு ஏற்ற வகையில் கல்வி முறை மாறியுள்ளது. எமது தாய்மார்களே குடும்பங்களுக்குத் தலைமைத்துவம் வழங்குகின்றனர். அனைத்து வீட்டு வேலைகளையும் தங்களுடைய கைகளினாலேயே இயக்குகின்றனர். தலைமைத்துவம் என்பது கல்வி மாத்திரமல்ல என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டுப்பற்று கொண்டவர்கள் உருவாகுவது சமூக அடிப்படையிலான கல்வி முறையில் ஆகும்.

இலங்கையின் புகழ்பெற்ற பாடசாலைகளில் இருக்கின்ற அதே சகல வசதிகளும் கிராமிய மட்டத்தில் இருக்கின்றனவா, இது தெளிவாக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். இந்நாட்டில் பெண்கள் கல்வி ரீதியாக மேலும் வலுப்பெற வேண்டுமானால் கட்டாயமாக கிராமிய பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் தொழிநுட்ப பாடங்கள் தொடர்பில் மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். சகல விடயங்களும் மகனுக்கு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்திலிருந்து எமது தாய்மார்கள் விலகி செயற்பட வேண்டும். நாங்கள் என்ன கூறினாலும் வீட்டில் அதிகளவில் ஆண் பிள்ளைகளுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டுகின்றது. இவை மாற்றமடைந்து இருபாலருக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

**பெண்களின் சுகாதார ஆரோக்கியத்திற்காக அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்ன? கிராமிய பெண்களின் சுகாதார வாழ்வினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய விசேடமான விடயங்கள் யாவை?**
இலங்கையில் தாய் - சேய் இறப்பு சதவீதம் உலகின் ஏனைய நாடுகளின் தாய் - சேய் இறப்பு சதவீதத்துடன் ஒப்பிடும் போது எமக்கு மகிழ்ச்சியடையக்கூடியதாக இருக்கின்றது. விஷேடமாக எமது நாட்டில் அடிப்படை சுகாதாரம் சிறந்த நிலையில் காணப்படுகின்றது. அடிப்படை சுகாதாரம் தொடர்பில் சமூகம் அறிந்துவைத்துள்ளது. சமூகத்துடன் மிக நெருங்கிய தொடர்பினை பேணுகின்ற எனக்கு இது தொடர்பில் சிறந்த ஒரு அனுபவம் இருக்கின்றது. இந்த நாட்டில் யுத்தம் கடுமையாக இடம்பெற்றுவந்த காலத்தில் நந்திக்கடல் களப்பின் ஊடாக பாதுகாப்பு பிரிவினரிடம் வந்து சேர்ந்த தாய்மார்கள், அவர்கள் வரும் போது எடுத்து வந்தது பிள்ளைகளின் சுகாதார தரவரிசை புத்தகம் மற்றும் அவர்களிடமிருந்த தங்க ஆபரணங்கள் மாத்திரம் ஆகும். பெண்களுக்கு உணவு, மருத்துவம் போன்ற சகல விடயங்களையும் வழங்கவேண்டும். பெண்களின் சுகாதார விடயங்களில் செயற்பட வேண்டியவர்கள் பெண்கள் மட்டுமல்லர். ஆண்களுக்கு இது தொடர்பில் கூடிய பொறுப்பு காணப்படுகின்றது. ஒருசில மதங்களில் பெண்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு விளையாடுவது போன்ற விடயங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது பாரிய சிக்கலாகும்.

> “இலங்கையில் தாய் - சேய் இறப்பு சதவீதம் உலகின் ஏனைய நாடுகளின், தாய் - சேய் இறப்பு சதவீதத்துடன் ஒப்பிடும் போது மகிழ்ச்சியடையக்கூடியதாக உள்ளது.”

**இன்றைய சமூகத்தில் ஒரு பெண் ஏன் தலைவராக முன்னோக்கிச் செல்ல வேண்டும்?**
ஆண்களைப் போன்றே பெண்களும் இன்று பல்வேறு துறைகளில் முன்னோக்கி சென்றிருக்கின்றனர். தாதிமார் மற்றும் ஆசிரியர்கள் போன்ற இரு துறையினரும் நல்ல தலைமகளாக உள்ளனர். கிராமிய அபிவிருத்திக்கு தலைமை தாங்கும்

பெண்கள் பாரியளவில் எமது நாட்டில் உள்ளனர். சமூகத்தில் பெண்களுக்கு கிடைக்க வேண்டிய இடம் அவர்களுக்கு கிடைக்கவேண்டும்.

பெண்களுக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். வெளிநாடு சென்றுள்ள பெண்கள் பாரிய அழுத்தங்களுக்கு இன்று முகங் கொடுத்துள்ளனர். தொழில் வழங்குநர்களினால் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்ற பெண்கள் சார்பில் செயற்பட வேண்டும். விசேடமாக இந்த நாட்டுப் பெண்கள் கிராமிய அடிப்படையில் பல்வேறுபட்ட சங்கங்களை அமைத்து செயற்படுகின்றனர். தாய்மார்களின் தலைமையில் உருவாக்கப்பட்டிருக்கின்றன பெண்கள் சங்கங்கள், அபிவிருத்தி சங்கங்கள், கடன் வழங்குகின்ற சங்கங்கள் போன்ற அமைப்பில் பல்வேறு முறைகள் மூலம் பல்வேறுபட்ட விடயங்களை பெண்கள் செயற்படுத்தி வருகின்றனர். இதுவொரு சாதகமான விடயமாகும். அதேபோன்று பெருந்தோட்ட பெண்கள் பாரிய அளவில் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர். உடலியல் ரீதியாக மற்றும் உளவியல் ரீதியாகவும் சிலவேளை பாலியல் ரீதியாகவும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் தொடர்பில் வெற்றிகரமான வேலைத்திட்டமொன்று அவசியமாகவுள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்நாட்டில் பெண்களின் அரசியல் பங்களிப்பு குறைந்ததாக காணப்படுகின்றது. உங்களுடைய கருத்துப்படி அரசியல் ரீதியாக பெண்கள் முகம் கொடுக்கின்ற சவால்கள் யாவை?
அநேகமான சந்தர்ப்பங்களில் இந்நாட்டில் பெண்கள் அரசியலுக்கு பிரவேசிப்பது தன்னுடைய தந்தை அல்லது கணவரின் அடிப்பாதையைப் பின்பற்றியே ஆகும். அவ்வாறான குடும்ப அரசியல் பின்னணி அற்ற பெண்களினால் அரசியலுக்குள் பிரவேசிக்க முடியாது. பெண்கள் அரசியலுக்குள் வருவதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படுவது தொடர்பில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகியுள்ளன. ஆண்களுடன் அரசியலில் சமமாக செயற்படுவதற்கு பெண்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டும். இந்த நிலையை ஏற்படுத்துவதற்காக வேண்டி ஊடகங்கள் கூடுதலாக அழுத்தங்களை வழங்கியுள்ளன.

**இந்நாட்டு பெண்களின் அரசியல் பங்களிப்பை உயர்த்துவதற்காக நீங்கள் முன்வைக்கும் யோசனைகள் எவை?**

அரசியலில் பெண்களுக்கு சமனான அந்தஸ்துகள் வழங்கப்படுவதற்கான வேலைத்திட்டமொன்று அவசியமாகும். உலகில் ஏனைய நாடுகளில் நடைமுறையிலுள்ள நிலைமைகள் தொடர்பாக அவதானிப்பது முக்கியமானதாகும். பொருத்தமான சிறந்த முறைமையில், நிலவிவரும் இந்த சமமின்மை சீர்செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

பிரதேச மட்டத்தில் இருந்து தேசிய மட்டம் வரை இந்த நாட்டின் பெண்கள் அரசியல் பங்களிப்பு விருத்தியடைய வேண்டும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

**பெண்களுக்கெதிரான வன்முறைகளை குறைப்பதற்காக வேண்டி புதிய அரச கொள்கைகள் நடைமுறைப்படுத்த வேண்டுமா, அவ்வாறாயின் மேற்கொள்ள வேண்டிய புதிய அரச கொள்கைகள் யாவை?**
இந்த நாட்டில் பெண்கள் அதிக அளவில் தனது வீட்டினுள்ளேயே அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர். பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் அலுவலகத்தின் தகவல்கள் மூலம் இந்த நிலைமை சரியாக புலப்படுகின்றது. கர்ப்ப காலத்தினுள் இந்த நிலைமை மிக மோசமான நிலைமைக்கு தள்ளப்படுகின்றது. பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு எதிராக தற்போது நடைமுறையில் உள்ள சட்டமானது கடுமையாக செயல்படுத்தப்பட வேண்டும். இது மிக முக்கியமானது. பெண்கள் தமக்கு எதிராக இழைக்கப்படுகின்ற துஷ்பிரயோகங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை முன்வைத்து வெளிப்படுத்தாமல் இருப்பது மிகவும் கவலைக்குரியதாகும். இவ்வாறு முறைப்பாடுகளை முன்வைப்பது பிற்காலத்தில் தனக்கும் தான் சார்ந்த குடும்பத்திற்கும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என்ற ஐயம் அவர்களுக்கு மத்தியில் நிலவுகின்றது. அதேபோன்று இன்றைய காலகட்டத்தில் ஊடகங்கள் மூலமாக இவை பெரிதுபடுத்திக் காட்டப்படுகின்றன. இது சாதகமான சிந்தனைகளை சமூகமயமாக்குவதில்லை. நாட்டில் தற்போது பெண்கள் தொடர்பில் சரியான கொள்கை செயற்பாட்டில் இல்லை. இந்த முக்கிய விடயம் தொடர்பாக பொருத்தமான பிரிவினர் தமது அவதானங்களை செலுத்த வேண்டும்.

அடுத்து, நாட்டில் கட்டாயமாக ஒழுக்க விதிகள் அமைக்கப்படுவது மிகவும் இன்றியமையாததாகும். புதிய கொள்கைகளை போன்றே பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராகவும் சட்டமானது கடுமையாக செயற்படவேண்டும். பெண்கள் தாம் முகம் கொடுக்கின்ற வன்முறைகளுக்கெதிராக முன்வர வேண்டும். தகவல்களை மறைப்பதனால் இதனை கட்டுப்படுத்த முடியாது. பெண்களுக்கு ஆதரவளிக்க சமூகம் முன்வர வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

**ஒட்டுமொத்த அடிப்படையில் இந்த நாட்டு பெண்களுக்கு நீங்கள் வழங்குகின்ற செய்தி என்ன?**

பெண்கள் தற்காலத்தில் கலைத்துறையில் மாத்திரமல்லாமல் தொழில்நுட்ப ரீதியிலும் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார அடிப்படையில் தாம் முகம் கொடுக்கின்ற இந்த சவால்மிக்க விடயங்களில் விசேட அவதானத்தை செலுத்தி பெண்கள் செயற்பட வேண்டும். எந்தவித சவால்களுக்கும் முகம் கொடுக்கக் கூடிய ஆற்றல் உங்களுக்கு மத்தியில் இருக்கிறது. தேவைப்படுவது என்னவென்றால், அவற்றை முகம் கொடுத்து வெற்றி கொள்வதற்காக வேண்டி முன்வருவது மாத்திரமேயாகும். ஏழ்மையான மனப்பாங்கில் இல்லாமல் நேர் சிந்தனைகளுடன் நாம் செயற்பட வேண்டும். அதேபோன்று கல்வி முறைகளினால் வளர்க்கப்படும் நவீன பெண்களாகிய நீங்கள் பல்வேறுபட்ட துறைகளில் தலைமைத்துவம், நிர்வாகப் பொறுப்புகளை ஏற்று செயற்படுத்துவதற்கு பின் நிற்கக்கூடாது.

*நேர்காணல் - எதிரிவீர குணசேகர*
*ஊடக அதிகாரி, தொடர்பாடல் திணைக்களம்*

# புகைப்படத் தொகுப்பு

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டபோது





கௌரவ சபாநாயகர் முதல் தடவையாக சபைக்கு உரையாற்றியபோது





பாராளுமன்ற அமர்வு முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற தேனீர் விருந்தில் சுமுக கலந்துரையாடல்...






தொடர்பாடல் திணைக்களம்,
இலங்கை பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
இலங்கை

தொலைபேசி : +94 11 2777100
தொலைநகல்: +94 11 2777227

Parliament of Sri Lanka | @ParliamentLK | @slparliament | Parliament of Sri Lanka